Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department of Education, Sabaragamuwa Province/ Weekly School Department

**வாரம் 01**

**பாடம்:- வணிகக்கல்வி**

**தரம்:13**


**தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)**

**இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்**


**தேர்ச்சி 16:-** வணிகத்தின் வெற்றிக்கு மனிதவளத்தை வினைத்திறன் விளைதிறன் ஆக பயன்படுத்தும் முறையை தேடியவர் அறிவர்.

(01). விண்ணப்பதாரிகளின் வேலை வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களை இனம் காணும் முறை ஒன்றே விண்ணப்பதாரர்களை தெரிவு செய்தல் எனப்படும்.

I. தொழிலுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான நபரை தெரிவு செய்ய பயன்படுத்தும் முறைகள் யாவை?

II. மேற்குறிப்பிட்ட முறைக்கேற்ப ஊழியர்களை தெரிவு செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?

(02). பொருத்தமான விண்ணப்பதாரர்களை தெரிவு செய்ததன் பின்னர் பொருத்தமான நபர்களை உரிய வேலை , பதவிகளில் நியமனம் செய்யும் முறை ஊழியர் ஆட்சேர்த்தல் எனப்படும்.

I. ஊழியர்களை நியமித்து கொள்ளும் இரு பிரதான அடிப்படைகளும் யாவை?

(03). ஊழியர் ஒருவர் வேலையில் நியமிக்கப்பட்ட பின்னர் அவருக்கு வேலை தொடர்பான கருமங்கள், பணிகள், பொறுப்புகள், நிபந்தனைகள் என்பவற்றை விரிவாக உள்ளடக்கி தொழில் வழங்குபவரினால் வழங்கப்படுகின்ற சட்டரீதியான ஆவணம் நியமனக் கடிதம் எனப்படும்.

I. நியமனக் கடிதம் ஒன்றின் முக்கியத்துவத்தினை விபரிக்குக.

II. நியமன கடிதம் ஒன்றில் உள்ளடக்கப் படுகின்றன விடயங்களை குறிப்பிடுக.

(04). பதவியில் இணைக்கப்பட்ட புதிய ஊழியர் ஒருவரை பதவியில் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் சில காலப்பகுதிக்கு அவர் குறிப்பிட்ட வணிகத்தில் சேவையாற்ற வேண்டும்.

I. தகுதிகாண் காலம் என்றால் என்ன?

II. தகுதிகாண் காலத்தினுள் ஊழியருக்கு தமது கருமங்களை உரிய முறையில் நிறைவேற்ற முடியாமல் போனால் முகாமை இனால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கினை தருக?